கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 244/2018

பிரதிவாதி தரப்பு சாட்சி -2 மணி (எ) மாரியப்பன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 22.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வாதி இரவிசந்திரன் தான் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது அல்ல. எனவே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. வாதி என்ன சர்வே எண்ணை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. எதிருரை மற்றும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும். பி.வா.சா.ஆ-1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையான ஆவணத்தில் கூறுப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.282/2013 வழககில் நான் ஒரு தரப்பினர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ-3 ல் நான் தரப்பினர் என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியாது. மேற்படி அசல் வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றும், அதனால் எனக்கு அவ்வழக்கின் முழு விவரங்கள் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

2. பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாததால் அவற்றை என் மூலமாக குறியீடு செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் மேற்படி அசல் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி எதிர் வழக்குரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் அனுபவம் செய்யும் நிலத்தின் சர்வே எண். தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.75 ஆகும். மேற்படி நிலத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் திருமலைகொழுந்தாபிள்ளை என்பவரிடமிருந்து வாங்கினேன். பி..சா.ஆ.11 முதல் பி.சா.ஆ-19 வரையான ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது இடத்தை ஒட்டி நேரடி வழி கிடையாது என்றால் சரிதான். எனது

நிலத்திற்கு தெற்கில் யாருடைய நிலம் என்றால்அய்யம்மாள் நிலம்.

3. அய்யம்மாள் நிலத்திற்கு தென்புறம் யார் நிலம் என்றால் பொம்மா நாயக்கர் நிலம். அய்யம்மாள் நிலத்திற்கும் பொம்மா நாயக்கர் நிலத்திற்கும் இடையில் வேறு யாருடைய வயக்காடும் இல்லை என்றால் இல்லை. நான் அய்யம்மாள் மற்றும் பொம்மா நாயக்கர் நிலங்களை தாண்டி தான் மெயின் ரோடு செல்ல வேண்டும் என்றால் இல்லை. வேறு பாதை உள்ளது. அய்யம்மாள் மற்றும் பொம்மா நாயக்கர் ஆகியோர் நிலத்தின் வழியாக தான் நான் பஞ்சாயத்து மெயின் ரோட்டிற்கு செல்ல முடியும் என்றால் சரியல்ல. அய்யம்மாள் மற்றும் பொம்மா நாயக்கர் நிலங்களுக்கு இடையே முனியம்மாள் நிலம் உள்ளது என்றால் இல்லை. எனது நிலத்திற்கும் அய்யம்மாள் நிலத்திற்கும் நடுவில் முனியம்மாள் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி முனியம்மாள் எனக்கு சின்னம்மா உறவு முறை ஆகும். எனது நிலத்திற்கு வடபுறம் இரவிசந்திரன் நிலம் உள்ளது.

4. என்னுடைய நிலம் மற்றும் அய்யம்மாள், பொம்மா நாயக்கர், முனியம்மாள் ஆகியோர் நிலங்களை கடந்து தான் வாதி பஞ்சாயத்து பாதைக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.77 என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து பாதையை ஒட்டி 1ம் பிரதிவாதி செல்வராஜ் என்பவரின் இடம் உள்ளது என்றால் சரிதான். அவரும் இவ்வழக்கில் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். எனது 62 செண்ட் நிலமானது என் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தாகும். எனது தகப்பனார் எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால் 1981ம் வருடம். திருமலைகொழுந்தாப்பிள்ளை என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். வீரமலை, காளியப்பன் மற்றும் முத்துசாமி ஆகியோருடன் சேர்ந்து ஏக்கர் 4.11 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றார். வீரமலை, காளியப்பன் மற்றும் முத்துசாமி ஆகியோர் எனக்கு சித்தப்பா உறவு முறை ஆகும். மேற்படி நிலம் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை.

5. மேற்படி நிலத்திற்கு வருவாய் துறை ஆவணங்கள் தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் சித்தப்பாக்கள் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண்.77 இல்லை என்றும், அது சர்வே எண்.75 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.75 ன் நான்கெல்லை விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேல்புறம் வைரப்பெருமாள் நிலமும், கீழ்புறம் எனது நிலமும், வடக்கே வாதி இரவிசந்திரனின் நிலமான சர்வே எண் 77 உள்ளது. தென்புறத்தில் முனியம்மாள் மற்றும் காளியப்பனின் நிலம் உள்ளது. பி.சா.ஆ.7 ஆவணத்தில் மேற்சொன்ன சொத்திற்கு நான்கெல்லை விபரம் வேறாக உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான்கெல்லை விவரத்தில் திருத்தம் செய்ய எந்த திருத்தல் பத்திரமும் ஏற்படுத்தவில்லை என்றால்

சரிதான். நானும் எனது தம்பியும் பாகப்பத்திரம் செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

6. மேறப்டி பாகபத்திரத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தின் நான்கெல்லை விவரத்தில் வடபுறம் நிலமாக இரவிசந்திரம் இடம் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்தால் தான் தெரியவரும். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் எனது கைவசம் தான் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court, read over and interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**